II ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,

THIRUVALLUR AT POONAMALLEE

O.S.No. 337 of 2023

Deposition of witness for the Plaintiff/PW 1
solemnly by Thiru.K.Palanikumar, Assistant
in accordance with the provision of Act I for 1873 on 10.09.2025

Name	: Manjula	Age	:
Father's / Husband's Name	:	Village	:
Taluk	:	Distict	:

1, 2, 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–

1ம் பிரதிவாதி எனது தந்தை. நான் பி.காம் படித்துள்ளேன். என்னை என் தந்தை தான் படிக்க வைத்தார். நான் படித்து முடித்துவிட்டு திருமணத்திற்கு முன்பு காஞ்சிபுரம் கூட்டுறவு வங்கியில் பயிற்சியாளராக வேலைக்குபோனேன். மாதம் ரூ.1,500/- முதல் ரூ.2,000/- வரை ஊக்கத்தொகை கிடைத்தது. ஒரு வருடம் மட்டும் தான் வேலைக்கு போனேன். நான் இருளபாளையத்தில் பிறந்தேன். அங்கிருந்து காஞ்சிபுரம் அருகே உள்ள செய்யாறில் படித்தேன். வீட்டில் இருந்து செய்யாறுக்கு போய்வர ஒரு நாளைக்கு மொத்தம் ரூ.40/- ஆகும். இந்த தொகையை என் தந்தை தான் கொடுத்தார். எனக்கான மாத செலவே ரூ.500/-க்கு மேல் ஆகிவிடும் என்றால் சரிதான். பண்டிகை தினங்களிலும் என் தந்தை தான் எனக்கு உடைகள் எடுத்துக்கொடுப்பார். எனது திருமணம் பெற்றோரால் நிச்சையிக்கப்பட்டது ஆகும். தனியாக நிச்சையதார்த்தமும் நடந்தது என்றால் சரிதான். எனது திருமணநிச்சையதார்த்தம் திருமழிசையில் ஓட்டல் உறவேவில் நடந்தது. அந்த ஓட்டல் அந்த பகுதியில் பெரியது என்றால் சரியல்ல. எனது கணவர் பெயர் ராஜகோபால். அவர் எனது உறவினர் அல்ல. அவர் ஆவடியை சார்ந்தவர். 17.09.2003ல் எனக்கு பூந்தமல்லி ஸ்ரீனிவாசா திருமணமண்டபத்தில் திருமணம் நடந்தது என்றால் சரிதான். திருமணத்திற்கான அனைத்து செலவுகளையும் என் தந்தை தான் செய்தார் என்றால் சரிதான். என்னிடம்

காட்டப்படுவது எனது திருமண பத்திரிக்கை என்றால் சரிதான். அது பி.சா.ஆ.1 ஆகும். என் திருமணத்திற்கு சீர் வரிசைகளும் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். எனக்கு என் தந்த 30 சவரன் நகை போட்டார். நான் சொல்வது தவறு என்றும் என் தந்தை 100 சவரன் நகை போட்டார் என்றாலும் சரியல்ல. எனக்கு இரண்டு ஆண்குழந்தைகள் உள்ளனர். ஒருவர் கல்லூரியிலும், ஒருவர் பள்ளியிலும் படிக்கிறார்கள். அவர்களது பிறந்தநாள், காதுகுத்து ஆகிய வைபவங்களுக்கு என் தந்தை சீர் வரிசை செய்துள்ளார் என்றால் சரிதான். வழக்கு சொத்து என் தாத்தா சொத்து ஆகும். என் தாத்தாவிற்கு 4 ஆண் மக்களும், 3 பெண் மக்களும் பிறந்தனர். என் தாத்தாவிற்கு மொத்தம் எத்தனை ஏக்கர் சொத்து உள்ளது என்று குறிப்பாக தெரியாது. சொத்துகள் எதுவும் வில்லங்கத்தில் இல்லை. அடமானத்தில் ஏதாவது இருந்ததா என்று எனக்கு தெரியாது. என் தாத்தா பெயர் கோதண்டராமன். என்னிடம் காட்டப்படும் ஆவணம் என் தாத்தா சொத்தை அடமானம் வைத்து மீட்டதற்கான ரசீது என்றால் எனக்குத் தெரியாது. என் கணவர் குடிநீர் லேபில்களை தயாரிக்கும் தொழில் செய்கிறார். என் தந்தையும் அவரது சகோதர்களும் பாகப்பிரிவினை செய்து கொண்ட சொத்தை என் தந்தை 2003ம் ஆண்டில் விற்பனை செய்து அதில் வந்த பணத்தைக்கொண்டு தான் எனக்கு திருமணம் செய்தார் என்றால் சரிதான். என் தந்தைக்கு இரண்டு ஐட்டங்களாக சொத்து கிடைத்தது என்றால் சரிதான். என் தாயார் எனக்கு 2 ஏக்கர் 77 செண்டு நிலத்தை பொருத்து 24.05.2023 அன்று ஆவண எண். 7971/2023-ன் படி ஒரு செட்டில்மெண்ட் ஆவணத்தை எழுதி வைத்துள்ளார் என்றால் எனக்கு இப்போது தான் தெரியும். எனது வழக்குரை சங்கதிகள் எனக்கு நன்கு தெரியும். எனக்கு வழக்கின் சொத்து விவரங்கள் அனைத்தும் என் அண்ணன் தினேஷ் மூலமாக தெரியும்.

(இந்நிலையில் 1, 2 மற்றும் 4 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)